



## வன யாத்திரை

தர்மசாஸ்தாவான ஐயப்பனைத் தரிசிக்கும் முயற்சி ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் பயிற்சி. இதில் விரதமும், வன யாத்திரையும் முக்கியமானவை. எருமேலியை அடுத்தே வனம் தொடங்கிவிடும். தற்போது 7 கி.மீ. வனப்பகுதி குடியிருப்பு பகுதியாக உள்ளது. கானகம் இரும்புன்னிக் கரையில் தொடங்குகிறது. கோட்டப்படியிலிருந்து ஐயப்ப பூங்காவனம் விரிகிறது. இரும்புன்னிக்கரையிலிருந்து அரசு முடிக் கோட்டை உள்ளது. அங்கு பரத்தோடு நீராடலும், இளைப்பாறலும் உண்டு. இங்கு ஐயப்பன் படைகளுடன் தங்கி இளைப்பாறியதாக ஐதீகம். இதன்பின் வருவது காளகட்டி. இது எருமேலியிலிருந்து 13 கி.மீ. தூரம். அரச முடியிலிருந்து காளகட்டி வரை சமதரையே உள்ளது. காளகட்டியின் பின்பு அழுதை. இங்கு நதி புனிதம்; மேடு கடினம். நதி பம்பையில் சேரும். காளகட்டி முதல் அழுதை வரை 3 கி.மீ. அடுத்த 3 கி.மீ. அழுதை மேடு. அதிகாலை அல்லது இரவில் ஏறுவது நலம். மக்கள் வாழிடம் உள்ளது. மறுகரையோ வனம். (கரிமலை, நீலிமலை, அழுதை மேடு மூன்றும் சிரமமான சிகரங்கள்). அழுதையிலிருந்து பம்பை 37 கி.மீ. அடுத்து வருவது கல்லிடுங்குன்றம். அடுத்து இஞ்சிப் பாறைக் கோட்டை. இதனிடையே சாலை உள்ளது. பயணம் கிழக்கு நோக்கித் தொடரும். பல ஒடைகள் கடந்து கரிமலை அடிவாரம் வரலாம். அங்கு கரிமலைத்தோடு. இஞ்சிப் பாறைக் கோட்டையிலிருந்து கரிமலை 11 கி.மீ. அருகில் முக்குழியில் இளைப்பாறலாம். அடுத்து கரிமலை. கரிமலைத் தோட்டிலிருந்து கரிமலை 2 கி.மீ. அதன்பின் செங்குத்தான கரிமலை ஏற்றம். ஏழுதட்டுகளின் பின்பு கரிமலை மேடு. அடுத்து வரும் கரிமலை இறக்கம். அடுத்து வரும் இடைத்தங்கல்கள் வலியான வட்டம் மற்றும் சிறியான வட்டம். வலியான வட்டம் பம்பை போன்று அகலிடம். பின்பு வரும் பம்பை புனித இடம். புனித நீராடல், பிதுர்க்கடன், பம்பை சத்யா, பம்பை விளக்கு என்பவை முக்கியம். இங்கிருந்து சந்நிதிக்கு இரு வழிகள் உள்ளன. முன்னது நீலிமலை வழி அமைந்த மரபுப் பாதை. மற்றது சுவாமி ஐயப்பன் சாலை. நீலி மலை ஏற்றம் கடினம். அடுத்து வரும் அப்பாச்சி மேடு அச்சம் தருவது. அப்பாச்சிக் குழி, இப்பாச்சிக்குழி எனும் இருபுறப் பள்ளங்களும் தீய சக்திகளின் இருப்பிடங்கள் எனக் கருதி பிரீதி செய்வர் பக்தர்கள். கடந்தால் சபரி பீடம் எனும் சமதரை. சபரி பீடத்திலிருந்து சந்நிதி 1 கி.மீ. தூரம். அப்பாச்சிக் குழியைத் தொடாது ஸ்ரீ ஐயப்பன் சாலை சரங்குத்தியில் முடிகிறது. அப்பாச்சிமேடு கடந்து சபரி பீடம் கடந்தால் சரங்குத்தி ஆல். இங்கிருந்து சந்திராநந்தன் சாலை உள்ளது. அது செங்குத்தானதன்று; சாய்வானது. இங்கு டோலிகள் கிடைக்கும். அடுத்து வருவது பதினெட்டாம்படியும் சந்நிதானமும்.

## மந்திரங்கள்

**மாலை அணியும்போது சொல்ல வேண்டிய மஹா மந்திரம்:**

1. ஞானமுத்ராம் சாஸ்த்ருமுத்ராம்
குருமுத்ராம் நமாம்யஹம்
வனமுத்ராம் சுத்தமுத்ராம்
ருத்ரமுத்ராம் நமாம்யஹம்

2. சாந்தமுத்ராம் ஸத்யமுத்ராம்
வ்ரதமுத்ராம் நமாம்யஹம்
சபர்யாச்ரம ஸத்யேன
முத்ராம் பாது ஸதாபிமே

3. குரு தக்ஷிண்யா பூர்வம்
தஸ்யாநுக்ரஹ சாரிணே
சரணகத முத்ராக்யம்
த்வந்முத்ராம் தாரயாம்யஹம்

4. சிந்முத்ராம் கேசரி முத்ராம்
பத்ரமுத்ராம் நமாம்யஹம்
ஸபர்யாசல முத்ராயை
நமஸ்துப்யம் நமோ நம:

**மாலை கழற்றும்போது கூறவேண்டிய மந்திர சுலோகம்:**

1. அபூர்வமசலா ரோஹ
திவ்ய தர்சன காரண
ஸாத்த்ரு முத்ராத் மஹாதேவ
தேஹீமே வ்ர்த மோசனம்

## வழிபாட்டு வகைமைகள்

- **இருமுடிக் கட்டு** என்னும் பள்ளிக்கட்டு
- **கட்டு முறுக்கு:** இருமுடிக்கட்டினைக் கட்டியபின் பிராயச்சித்த நோக்கோடு பள்ளிக்கட்டின் உச்சியில் வெற்றிலை பாக்கு, நாணயம் வைத்திடுவர்
- **பேட்டைத் துள்ளல்:** எருமேலியில் நிகழும் ஆட்டம். வாவருக்கு மஞ்சளும் நல்லமிளகும்; பெருங்கோயிலில் சூடமும் ஏற்றுவர்.
- **பெருந்தோடு:** மாவும், வறுத்த அரிசியும்
- **காளகட்டி:** கற்பூரம் ஏற்றல், காணிக்கையிடுதல், சிதறு தேங்காய் உடைத்தல்.
- **அழுதை:** அழுதையாற்றில் முங்கி கல்லெடுப்பர்; பஜனை செய்வர்; ஆழி பூஜையும் நிகழ்த்துவர்.
- **கல்லிடுங்குன்றம்:** அழுதையில் எடுத்த கல்லை இட்டு வணங்குமிடம்; கற்பூரம் ஏற்றுவர்.
- **கரிமலை:** கரிமலை நாதர் மீது மஞ்சள் பொடி பூசிடுவர்.
- **பம்பை:** நீராடல்; பிதுர்கடன் செய்தல்; பம்பா சத்யா; பம்பா விளக்கு.
- **நீலிமலை:** பந்தள ராஜனின் பிரதிநிதியிடமிருந்து (கோயிலில்) விபூதி பெறுதல்
- **அப்பாச்சிமேடு:** காட்டு தேவதைகளை திருப்தி செய்ய, சோற்றுருண்டைகளை அப்பாச்சிக் குழியிலும், இப்பாச்சிக் குழியிலும் எறிவர்.
- **சபரி பீடம்:** கற்பூரம் கொளுத்துவர்; தேங்காய் உடைப்பர்.
- **சரங்குத்தி ஆல்:** கன்னி ஐயப்பன்மார் சரமிடுவர்; தேங்காய் எறியலாம்.
- **பதினெட்டாம் படி:** தமது மலை வருகையின் எண்ணிக்கைக்கு ஏற்ப குறிப்பிட்ட அப்படியில் தேங்காய் உடைப்பர்.
- **சந்நிதானம்:** காணிக்கையிடுவர்; நெய்யபிஷேகம் முக்கியம்
- மாளிகைபுரத்தம்மன்: ஆலயத்தைச் சுற்றித் தேங்காய் உருட்டுவர்; வெற்றிலை, மஞ்சள் பொடி, குங்குமம் முதலிய ஆராதனைகள். இங்குள்ள பிரசாதம் மொழி ஆற்றல் தரவல்லது.
- **கணபதி:** நெய்த்தேங்காயின் பாதி ஹோமகுண்டத்தில் எறியப்படும்; பாதி பிரசாதமாக வீட்டுக்குத் தரப்படும்.
- **கடுத்த ஸ்வாமி:** கதலிப்பழமும், மாவு, வறுத்த அரிசி, தேங்காய் முதலியவை.
- **மலைநடை பகவதி:** வெடி வழிபாடு; காணிக்கை
- **நாகராஜா:** கற்பூரமும், மஞ்சள்பொடி; சர்ப்பப் பாட்டு பாடுவித்தல்
- **வாவர் சாமி:** அரிசி, நல்லமிளகு, சந்தனம், பத்தி
- **மகர விளக்கு:** ஒளி வழிபாடு

**ஸ்ரீஹரிஹரசுதன் கலியுக வரதன் அனந்த சித்தன்
ஐயன் ஐயப்ப சுவாமியே... சரணம் ஐயப்பா!**